www.tamilarangam.net

# ஈழத்துப் போராட்டம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

059

# ஈழத்துப் போராட்டம்

கயல்விழி

வெளியீடு:

த. கோவேந்தன்

புதுமைப் பதிப்பகம்

8, பாவேந்தர் தெரு

ஆண்டவர் நகர், சென்னை-600 024

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதற் பதிப்பு : மே, 1983

விலை ரூ. 3-00

நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்
137, ஜானிஜான்கான் தெரு
சென்னை-600 014

# தமிழர் தலைவர் கலைஞர் பாராட்டு

எழுச்சி முரசொலிக்கும் சொற்கள்!

உணர்ச்சிப் பிழம்பான வரிகள்!

ஈழம் சுதந்திரத் தாயகமாக விளங்க வேண்டுமென்ற தணியாத ஆசை அலைமோதும் எண்ணத்து வண்ண வார்ப்படங்கள்!

கயல்விழி அவர்கள் எழுதியுள்ள ஈழத்துப் போராட்டம் என்ற இந்தச் சொல்லோவியம்; விடுதலை பெறத் துடிக்கும் ஈழத்துக்கான வீர உரையாகவும், விடுதலை பெற்ற பின்னர் இருந்திட வேண்டிய சமதர்மபூமி குறித்த விளக்க உரையாகவும் அமைந்துள்ளது. அவர்தம் எழுத்தாற்றலைப் பாராட்டுகிறேன்.

அன்பன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கயலின் நெஞ்சருமை

1. சேயான நிலையினிலே செய்பிழைகள்
அத்தனையும் திருத்திவிடும் மகளிர் உண்டு;
நாயாக நன்றி கெட்டு விட்ட பின்பும்
நல்லன்பு காட்டுகிற மகளிர் உண்டு;
நோயாகச் சமூகத்தில் மாந்தர் மாறின்
நோயகற்றும் நற்பண்பு மகளிர் உண்டு;
நீயாக இல்லாமல் தாயும் தள்ளும்
நிலையினிலே காக்கின்ற பெண்ணைக் கண்டேன்.

2. பெற்றஒரு தாய் கூடப் பொறுக்கமாட்டாள்
உடன் பிறந்த பெண்களும் வெறுப்பே கொள்வர்
உற்ற ஒரு மனைவியுந்தான் வெறுப்பாள்; நாளும்
உடன் பழகும் தோழர்களும் நாணுவார்கள்;
கற்றறிந்த அறிஞர்களும் மனம் நோவார்கள்:
காதலிலே பிறந்திட்ட மக்கள் நீப்பர்;
உற்றாரும் உறவினரும் கூசுவார்கள்
ஒரு செயலை அனைவருமே ஒதுக்குவார்கள்.
முற்றாக உலகொதுக்கும் மாந்தன் தன்னை
முகம் கோணாது ஓம்புகின்ற ஒருத்தி கண்டேன்.

3. அன்னவளை என்னென்று சொல்லுவேன் யான்
ஐம்பதாண்டு அளவினிலே எங்கும் காணேன்
சின்னவளாய் இவ்வுலகில் மாந்தர் மாறிச்
சிரிப்புக்கே ஆளாகிச் சிதையும் போதில்
என்னஇவள்! என்னஇவள்! என வியக்க
எழுகின்ற பெண் இவளைக் காணுந்தோறும்
மண்ணுலகின் மொழியெல்லாம் கூடினாலும்
மாது கயல் நெஞ்சருமை சொல்லொண்ணாதே.

**த. கோவேந்தன்**

## திரு. கே. சி. நித்தியானந்தா

அன்பும் அடக்கமும் குடிகொண்ட நெஞ்சினர்
ஆழ்ந்தறிந்து பேசும் அறிவுச் சுடரவர்
இடர்தீர்க்க மக்களை ஒன்றிணைக்க முயன்றவர்
தனை ஈந்து பணிசெய்து வாழ்ந்து மறைந்தாராம்.

சுடர்விளக் கனையதோர் வாழ்வு நடாத்தியே
சுதந்திர ஆர்வம் கொளுத்திய பெருமகன்
அவர் நினைவேற்றுநாம் தொண்டு புரிந்திட
அண்மையில் எய்துவம் சுதந்திர ஈழமே!

www.tamilarangam.net




## சுதந்திரதேவி......

நாளும் தான் போராடி
நாட்டினையும் மீட்டுவிட்டார்
அதன் பின்பும் போராட்டம்
ஓயவில்லை நம் நாட்டில்
உண்பதற்கும் உடுப்பதற்கும்
போராட்டம் நடத்தியவர்
மொழியுரிமை குடியுரிமை
அத்தனையும் இழந்து விட்டோம்.

உடமைகளை மீட்டு
உரிமைகளைக் காத்திடவும்,
நாட்டின் செழிப்பதனை
நினைத்துச் செயற்படவும்,
அறிவை வளர்த்து அவர்
அயராது உழைத்திடவும்,

சுதந்திர தேவி உனைத்
துரத்திப் பிடித்திடுவோம்





## இன ஒடுக்கல்

இலங்கைக்குச் சுதந்திரமாம்
ஈழவர்க்கு இல்லையது
ஈழத்தை மீட்ட பின்பே
சுதந்திரத்தை உணர்ந்திடலாம்

சிங்களத் தீவு என்று
சிலர் சொன்ன வார்த்தையினால்
சிந்தை மயங்கியவர்
செயலினிலே இறங்கிவிட்டார்.

இக்கொடுமை உணராத
தமிழினத்தின் தலைவர்களும்
ஒன்றுபட்டு வாழ்ந்து நாட்டில்
உயர்வடைய எண்ணமிட்டார்.

வடக்கென்றும் கிழக்கென்றும்
மலையக மக்களென்றும்
கூறுபோட்டுத் தமிழினத்தை
குறுக்கிவிட முனைந்து நின்றார்,

குடியுரிமை பறித்தெடுத்தார்
மலையகத்து மக்களிடம்
கொதித்தெழுந்த சில தலைவர்
தமிழரசுக் கட்சி என்றார்.

மூன்றிலிரண்டு வாக்குப் பலத்தால்
படிப்படியாக ஒடுக்குமுறைகளை
உரிமைகள் பறிக்க உறுதி பூண்டவர்
பக்குவமாகப் புகுத்தி வந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



மொழியுரிமை கேட்டு
சிறீ எதிர்ப்புப் போராட்டம்
சத்தியாக் கிரகத்தால்
சக்திகளை இழந்துவிட்டார்.

உடமைகளைக் காப்பதற்கு
தனிநாடு வேண்டுமென்று
பொறுமையின் பிறப்பிடமாம்
தந்தை செல்வா துணிந்து சொன்னார்.

தனிநாட்டை வென்றெடுக்கும்
சிக்கலான பொறுப்பதனை
இளைஞர் கரங்களிலே
ஒப்படைத்துச் சென்று விட்டார்.





## ஈழத்தாய் கண்ணீர்

இலங்கைத் தீவு மீண்டும் எரிந்தது
எஞ்சிய ஒரு சிலர் அகதி முகாம்களில்!
தஞ்சம் புகுந்த மலையக மக்களை
தடுக்கப் பார்த்தனர் தற்குறித் தலைவர்கள்.

பயந்து நடுங்கியோர் பதுங்கி வந்தனர்
ஈழம் நோக்கி இருப்பிடம் தேடி
அணைத்து நின்ற இளைஞர் குழாத்தினர்
இணைத்துச் செல்ல உறுதி பூண்டனர்.

பட்டினியால் வாடிய பின்
பசியோடு வந்தவரைக்
கனிவோடு பார்த்த அவள்
கண்கள் குளமானாள்.

கன்னங்களில் வழிந்தோடிக்
காய்ந்து போன கண்ணீரைத்
துடைத்து விடத் துணிந்தவர்கள்
திக்கெட்டும் அலைகின்றார்.

தன்மான இளைஞர் கூட்டம்
தாய் நாட்டின் சுதந்திரத்தைத்
திடுமென்று பெற்றிடவே
தீர்க்கமாய் உழைக்கின்றார்.

www.tamilarangam.net



## விடுதலை உணர்ச்சி

விடுதலை முழக்கங்கள்
விண்வெளி அதிரக்கேட்டு
உணர்ச்சியால் உந்தப்பட்ட
இளைஞர்கள் இவர்கள் பாராய்!

கொடிகளை அறுத்தெடுத்து
நெருப்பிலே வீசி விட்டு
வேடிக்கை பார்த்து நின்றார்
ஈழத்து இளைஞர் கேளாய்!

தமிழ் மகள் பட்ட துன்பம்
பொறுத்திட மாட்டோம் என்று
தளர்விலா நெஞ்சினோடு
துணிந்துதான் புறப்பட்டார்கள்!

மேடைகள் மீதமர்ந்து
விடுதலை முழக்கமிட்ட
வீரர்கள் எங்கே காணோம்?
வீட்டிலா பதுங்கி விட்டார்!

சட்டத்தை மறுப்பதற்கு
சத்தியாக் கிரகம் என்றார்
சத்தத்தைக் காணோம் இன்று
உண்ணா விரதம் போலும்!



## தமிழாராய்ச்சி மாநாடு

உலகத்து மொழியறிஞர்
பலர் கூடி யாழ் நகரில்
தமிழ் மொழியின் சிறப்பதனை
ஆய்வு செய்து முடிவினிலே!
ஈழத்து மக்களிடம்
தம்கருத்து வெளியிடவே
பகிரங்கக் கூட்டமெனப்
பறை சாற்றி நின்றார் கேள்!

உலகத்தில் சிறந்த மொழி
ஆறுதான் உண்டென்றார்
அதனிடையே தமிழ்மொழியும்
அடங்கியதை அறிந்தவர்கள்,
தமிழினிமை பெருமைகளைக்
கேட்டறிய வேண்டுமென்று
தலைநகரில் கூடியதை
என்னென்று செப்புவதோ!

ஒன்று திரண்டிருந்த
தமிழினத்தின் ஒற்றுமையை,
வலுப்படுத்தி ஊக்கிடுவார்
அறிஞர்கள் என்றெண்ணி
அஞ்சிய கயவர்கள்
அமைதியைக் கலைத்தெறிய
அதிகார பலத்தினை
அடக்கமாய்க் கையாண்டார்,
இனவெறி கொண்ட
நாவல் படையினர்
துரோகிகள் சிலரால்

www.tamilarangam.net



தூண்டப் பட்டனர்
கண்ணீர்ப் புகையும்
குண்டாந் தடிகளும்
திரண்டி ருந்தோரை
விரட்டியடித்தன.

உயிரதை இழந்து
உடல்கள் வீழ்ந்ததும்
ஆடைகள் கலைய
ஓடிய காட்சியும்
குழந்தைகள் தாயைப்
பிரிந்து நின்றதும்
இளைஞர் குருதியை
உறைய வைத்தது.

கடமையை உணர்ந்த
ஒரு சில தம்பியர்
கலங்கியோடியோர்
மனதினைத் தேற்றி
வீடுகள் சேர
உதவி புரிந்தபின்
உணர்ச்சித் தீயால்
உந்தப்பட்டனர்.

இனியும் நாம் பொறுக்க
இயலாது என்று சொல்லி
அரசாங்கச் சொத்தின்
மேல் நெருப்பை மூட்டி
உளத்தீயை ஒருவாறு
தணித்துக் கொண்டு
தொடர்ந்து சிலபணி செய்ய
உறுதி பூண்டனர்



# போராடும் நெஞ்சங்கள்

பனித்துளிகளால் நிறைந்திருந்தன
பச்சைத் தளிர்களின் நுனிகள்
கூடைகள் சுமந்தவர் கூட்டமாய்
வந்தனர் தேயிலைச் செடிகளினூடே.

மூச்சுக் காற்றினால் பனித்துளி மறைந்தது
அட்டைக் கடியினால் கால்கள் வலித்தன!
தேயிலைத் துளிர்களில் சுறுசுறுப்பாக
கைகள் அசைந்ததால் கூடைகள் நிரம்பின.

கைகளில்-கம்புடன் கங்காணி வருவதைக்
கவனித்த பெண்களோ கடுகி ஏகினர்!
தளிர்களை நிறுத்து அட்டையில் பதிந்தபின்
லயன்களை நோக்கி வேகமாய் நடந்தனர்.

தேசிய வருமதி திரட்டித் தருபவர்
உடலினை மறைக்க உடுதுணியில்லை
காய்ந்த வயிற்றைக் கஞ்சியோ கூழோ
நிறைத்தால் போதும் என்றிவர் உள்ளார்.

படிப்பறிவில்லாது பரிதவிக்கும் இவர்கள்நிலை
உணர்ந்திடவும் செயற்படவும்,
இணைந்து நின்று போராடி உரிமைகளைப் பெற்றிடவும்,
தர்க்கீகம் வழியமைத்து தரணிக்குத் தந்துதவும்

www.tamilarangam.net



# கைகளில் விலங்கு

அவள்
உள்ளத்தில் உவகை கொண்டு
தொழிலாளர் பெருந் திரள்
பார்த்து நின்றாள்,

அவள்
எண்ணிக் கிறு கிறுத்தாள்
அண்ணன் கூட்டத்தில்
பேசிய கருத்துக்களை!

அவள்
உற்றுக் கவனித்தாள்
மக்கள் முகங்களில்
வீசிநின்ற புத்தொளியை!

அவள்
உள்ளத்தில் ஊற்றெடுத்த
நம்பிக்கைப் பேரொளிகள்
நிலைக்கு முன்னர்
மேடையிலே இருந்தவரைச்
சிறைப் படுத்தி
கூட்டத்தைக் கயவர்கள்
குழப்பி விட்டார்.
ஆர்ப்பரித் தெழுந்தது
மக்கள் வெள்ளம்
அடக்க வந்தன
குண்டாந் தடிகள்
ஒருங்கிணைந் தெழுந்த
தொழிலாளர் கோசங்கள்
ஓங்கி யெழுந்தன
ஓங்கார முடனே!



அவள்
மலைத்து நின்று விட்டாள்
குண்டாந் தடிகளின் குறுக்கீட்டால்

அவள்
சிந்தித்துப் பார்க்கின்றாள்
அண்ணன் இயக்கத்தைக்
கட்டி வளர்த்த விதம்!

அவள்
உள்ளத்தில் உறுதி கொண்டாள்
அந்த இயக்கத்தை
அழிப்பாரை ஒழிப்பதற்கு!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறையில் நீ

ஈழத்து இளைஞர்காள்
வேழத்தின் வேகத்தில்
ஆழக் கடல் வீழ்ந்து
அவதியுறும் அன்பர்களே;

வாழ்விற்கு விலையென்ன?
நம் தாழ்விற்குக் காரணம் யார்?
என்பதனை அறிந்தும் நீர்
ஏன்தான் முறை புகுந்தீர்!

அடுத்தடுத்துப் பிரச்சனைகள்
அவதியுறும் ஈழவர்கள்
உணர்ச்சியினைத் தூண்டியவர்
உணர்வின்றி உறைகுகிறார்.

ஈழத்துப் போராட்டம்
ஈழவர்கள் மனவோட்டம்
இயங்க வந்த இளைஞர்களால்
இணைந்து நிற்க முடியவில்லை

புரட்சி பற்றித் தெளிவாகப்
புரிந்து கொள்ளத் தவறியதால்
வேகமாக ஓடியநீ
வேதனையால் வீழ்ந்துவிட்டாய்



பாதை தடுமாறியதால்
பாதாளச் சிறையுள்ளே
பட்டினியால் வாடுகிறாய்
பரிதாப நிலை உனது

சிறையினிலே வாடினாலும்
சிந்தனையை வளர்த்துவிடு
புரிந்தபின்பு வெளியே வா
புரட்சியினை நடத்திடுவோம்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொங்கல் நாள்

நாளை விடிந்தால்
பொங்கல் பொலியுமென்பார்
என்வீட்டில் இல்லையது
பண்ணையார் முற்றத்தில்

நாளை மறுநாளோ
மாட்டுப் பொங்கலென்பார்
எசமானின் தோட்டத்தில்
எருதுகளைக் குளிப்பாட்டிப்
பொட்டிட்டுப் பூவிட்டுப்
பூரித்து நின்றிடுவோம்

நம் வீட்டில் நம் மனைவி
பொங்கும் நாள் மலர்வதற்கு
நாங்கள் துணிந்து விட்டோம்
எசமானும் அறிவாரோ?
இனிய நாள் வருமென்று
இணைந்து நாம் நிற்கின்றோம்.

கொத்திக் களைபறித்துக்
கழனியெலாம் நீர்பாய்ச்சும்
எம்மனது குளிர்வதற்கும்
நாம் வீட்டில் பொங்க
எம்மனைவி பரிமாறி
இன்புற்றிருப்பதற்கும்
பொதுவுடமைத் தத்துவங்கள்
வழியமைத்துத் தருகிறதைப்
பண்ணை முதலாளி
பார்த்துக் கலங்குகிறார்.



# இன விடுதலை

ஈழத்து விடுதலையே
எங்கள் குறிக்கோளாம்
பாழ்பட்ட தமிழர்களின்
பண்புகள் நிலைப்பதற்கும்,
நாட்பட்ட அடிமைத்தனம்
நொறுங்கி உடைவதற்கும்,
போர்ப்பாட்டுப் பாடுகிறோம்
யார்பாட்டு எமை நிறுத்தும்?

ஆபிரிக்கக் கறுப்பர்களும்
அமரிக்கக் கறுப்பர்களும்
ஆப்பசைத்து ஆர்த்தெழுந்து
போராடி உயிர் துறந்து
செப்பரிய தியாகங்கள்
செய்துவரும் நேரமிது,
ஒப்பற்ற ஓரினத்தார்
உணர்ந்திட்டா வாழுகிறோம்?


சூதாடிக் கழிக்கின்றார்
சூழ்ச்சி பல செய்கின்றார்
ஈழத்தாய் கைவிலங்கை
ஒடித்தெறிய முயலவில்லை
சந்தர்ப்ப வாதிகளும்
சமயக் குரவர்களும்
மேடையிலே கூச்சலிட்டு
வீடுகளில் உறங்குகிறார்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சலசலப்புக் கஞ்சாத
பனங்காட்டு நரிகள் சில
பாங்குடனே நற்பணிகள்
பக்குவமாய் செய்து வந்தார்
ஒருமைப்பாட்டை மக்களிடம்
ஓர் மனதாய் ஊட்டுவதால்
போராட்ட வடிவமது
கூர்மை யடைந்துவரும்.





# ஏ கொடிய பசியே!

வயல் வெளிகளிலே
வாய்க்காலில் நடக்கின்றேன்
குருவிகளைக் கலைப்பதற்குக்
கைகளை உயர்த்துகிறேன்
முடியவில்லை அது உன்னால்........

மழை வரும் என்பதனால்
கழனியிலே இறங்கிவிட்டேன்
மண்ணைக் கொத்துவதற்கு
மண்வெட்டி தூக்குகிறேன்
பாதியிலே நிறுத்திவிட்டு
பக்கத்தில் அமர்கின்றேன்
படு பாவி உன்னால்தான்
வேலை முடியவில்லை.

அயர்ந்து கிடந்து விட்டேன்
எசமானும் வரப்போகிறார்
பேயே உன் கொடுமை
தாங்காது சிறுவர்கள்
சுருண்டு கிடப்பார்கள்
என்பதனை எண்ணியதால்
துணிந்து எழுந்துவிட்டேன்
வேலை தொடர்வதற்கு

உணர்ச்சியினைக் கொட்டி
உனைப் போக்க முயன்றவர்கள்
பாதியிலே நிறுத்தியது
பணத்தின் வேலையன்றோ!
உணர்ந்து உனைவிரட்ட
நாங்கள் துடிக்கின்றோம்
உன் கொடுமை நீக்கி
உயர்வுடனே வாழ்வதற்கு!

www.tamilarangam.net



# புரட்சிப் பாதையிலே

நாம்
நடக்கின்ற பாதையிலே
முள்ளிருக்கும் கல்லிருக்கும்
முட் புதர்கள் தானிருக்கும்.

எம்
அல்லலுறும் உள்ளத்திலே
தளர்விருக்கும் சோர்விருக்கும்
சஞ்சலங்கள் சேர்ந்திருக்கும்.

நாம்
துணிந்துவிட்ட செயலினிலே
இடரிருக்கும் துயரிருக்கும்
சிறைவாழ்வு காத்திருக்கும்.

எம்
எண்ணத்தின் இறுதியிலே
தெளிவிருக்கும் பொருளிருக்கும்
உறுதி உடனிருக்கும்.

நாம்
இணைந்திருக்கும் அமைப்பினிலே
கட்டிருக்கும் வலுவிருக்கும்
திட்டங்கள் நிறைந்திருக்கும்.

எம்
போராட்ட முடிவினிலே
இனம் இருக்கும் நாடிருக்கும்
புரட்சிப் பூ பூத்திருக்கும்.



# சமவுடமைப் பூங்கா

சின்னஞ் சிறுவர்கள்
எல்லோரும் பால் குடிக்க
வண்ணச் சட்டைகளை
வளமுடனே போட்டிருக்க
பாங்குடனே கல்வி
பலரும் பயின்று வர

சட்டங்கள் அங்கே......

உழைப்பவர்கள் ஆனாலும்
உழுபவர்கள் ஆனாலும்
பட்டம் பதவிகளை
வகிப்பவர்கள் ஆனாலும்
சமமாக எல்லோரும்
கிடைத்த பொருளனைத்தும்
பகிர்ந்துண்டு வாழ்வார்கள்......

வேற்றுமைகள் காட்டி
வெறுப்பவர்கள் தாம் இல்லை
சிலருழைப்பில் தமை வளர்க்க
தவிப்பவர்கள் எவருமில்லை
சிந்தனை செய்து நாட்டை
சிறப்பிக்க வழி வகுப்பார்
இணைந்து நிற்கும் கட்சியினை
கண்டு நாம் களித்திடுவோம்!

www.tamilarangam.net



# செல்வத்தில் மிதப்பவனே!

உனக்காக நாளுமவன்
கடினமாய் உழைக்கின்றான்!
பசியாற முடியாதவன்
தவிப்பதைநீ எண்ணமாட்டாய்!

செல்வத்தில் மிதக்கின்றாயே!
செழிப்பாலே திளைக்கின்றாயே!
மனிதா நீ சிந்திப்பாயோ?
மனிதர்கள் வாடுகின்றார்!

மூலதனம் போட்டேனென்பாய்!
முழுலாபம் திரட்டிச் சேர்ப்பாய்!
தர்மமென்பாய்! கோயிலென்பாய்
தாராளமாய் வழங்கி நிற்பாய்!

கூலியவன் கூட்டிக்கேட்டால்
சும்மா யிருக்க மாட்டாய்!
ஆளைவைத் தடியும் தந்து
வேலையையும் பறித்தெடுப்பாய்!

தொழிலாளர் திரண்டுவந்துன்
குரல்வளை நெரிப்பதற்கு!
வெகுதூரம் இல்லைபாராய்
வீணேநீ அழியப்போறாய்!



# இனத் துவேசம்

பசிப்பிணி போக்குவதால்
பக்குவாய் வாழ்ந்து வர,
சிங்கள இனத்தவர்கள்
சிலநாளாய் முயன்று வந்தார்
நாட்டினை ஆண்டவர்கள்
நல்ல திட்டம் தீட்டவில்லை
நாளும் பசி யோடுழல்வோர்
துயர் தீர வழியுமில்லை.

சிங்களப் பகுதிகளில்
பல கடைகள் திறந்துவைத்து
கொள்ளை லாபம் தேடிவந்தார்
யாழ்நகரின் முதலாளி.
அரைகுறையாய்ச் சோசலிசம்
கற்றறிந்த ஒரு சிலரோ
ஐயா சுரண்டுகிறார்
என்று சொல்லிச் சென்றிடுவார்.

வறுமையிருள் நீக்கிப்
பெற்றோரின் துயர்போக்க
வேலை நிதம் தேடி
வேகமாய் அலைகின்றார்
வேலையின்றி நீங்களெல்லாம்
துயருற்று வீழ்வதற்கும்
உயர்கல்வி பயின்றுவரும்

www.tamilarangam.net



வாய்ப்பினை இழந்ததற்கும்
காரணமே தமிழினம் தான்
என்று சொல்லி அதிகாரி
இவர்கள் திசை திருப்பி
தான் கழன்று சென்றிடுவான்.

ஏகாதி பத்தியமே
பிரிந்தாலும் தந்திரத்தால்
தேசிய இனங்களது
ஒற்றுமை குலைத்துவரும்
இச்சூழ்ச்சி அறியாதோர்
சிங்களவர் தமிழரென்றும்
உயர்குலத்துச் சாதியென்றும்
வசைபாடி மடிந்துவரும்
போக்கினை எண்ணித்தான்
நாளும்நான் தவிக்கின்றேன்!





# கல்விச் செல்வம்

படிப்பறிவு இல்லாதோர்
பட்டதுன்பம் பலவுண்டு
இடர்ப்பாடு பெருகிநித்தம்
அல்லலுற்று வாழ்ந்து வந்தார்.

உருவாக்கும் பொருளனைத்தும்
உரிய விலைவிற்று வந்து
ஏற்றமிகு வாழ்வமைக்க
அறிவுப் பயிர்வேண்டும்.

சட்டத்தைக் காட்டியவர்
சொத்துக்கள் பறிக்கையிலே!
ஏனுக்கும்! என்று பொருள்
புரியாதோர் தவித்திடுவார்!

பிறர்கூறும் வார்த்தைகளின்
பொருள் நயம் புரிந்து நாளும்
களிகூர்ந்து வாழ்ந்து வரக்
கல்விதான் பெருஞ்செல்வம்.

கல்வி அறிவுடையோர்
கண்டதற்கும் அஞ்ச மாட்டார்
இடர்ப்பாடு நீக்கப்பல
திட்டங்கள் தீட்டிடுவார்.

அடங்கி ஒடுங்கி வந்தோர்
புத்தியைத் தீட்டி நித்தம்
எதிர்க்கத் துணிந்த போது
விடுதலை முழக்கம் கேட்கும்

www.tamilarangam.net



# உழைக்கும் கரங்கள் ஒன்று சேரவே

உழைத்துழைத்து நாளும் நீ
உருக்குலைந்து போனாயே!
உன்பெருமை உணர்த்திடவே
ஒன்று திரண்டிடுவாய்!

செயற்கரிய செய்தும் நீ
வயிறார உண்பதற்கு
ஒருநாளும் முடியாமல்
தவிப்பதையும் தவிர்த்திடலாம்!

நீ சேர்க்கும் பணத்தையெல்லாம்
யார் யாரோ அனுபவிக்க
மரத்தடியில் உன் குடும்பம்
மந்தை போல் ஒதுங்குவதோ?

சிந்தனைகள் பல செய்து
ஒரு மனதாய் ஈடுபட்டால்
எதிரிகளை அழித்தொழிக்க
அனைவரையும் இணைத்திடலாம்!

ஓர் அணியில் திரண்டுவந்து
ஒரே குரலால்]சத்தமிட்டால்
அதிகார வர்க்கங்கள்
அசந்துதான் போயிடுமே!



# நித்தியானந்தா நித்தம் உழைப்பவர்

துயருற்ற தொழிலாளர்
துவண்டு விழும்பொழுது
அங்கிரு கரங்கள் நீண்டு
அரவணைத் தன்புகாட்டும்.

பொதுவுடமைப் பெட்டகத்தில்
தன்னையும் இணைத்து நின்று
தொழிலாளர் துன்பங்கள்
போக்கிடவே நிதம் உழைப்பார்.

அல்லும் பகலு மவர்
அயராது பணி செய்தும்
தொடர்ச்சியாய் ஈடுபட்டு
தொழிலாளர் நலன் காப்பார்.

உயர்ந்தோர் தாழ்ந்தோரென
ஒப்பு நோக்க முயன்றதில்லை
சாதிப் பிரிவுகளை ஒரு
பொருட்டாய் எண்ணவில்லை.

இனத்துக்கும் அப்பாலே
ஒடுங்கிவரும் வர்க்கமொன்று
ஓடாய் உழைத்து நாளும்
உலருவதை எண்ணிடுவார்.

சிங்களவர் தமிழரென்று
இனபேதம் காட்டி எமை
ஒடுக்க முயன்றவரை
ஒருபொழுதும் விட்டதில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உழைப்பவர்கள் கூலிக்காய்
உரிமைப் போர் நடத்துதற்கு
உறுதியுடன் ஒற்றுமையும்
உறுதுணை யென்றுரைத்திடுவார்.

எங்கள் உரிமைகளை
நாங்கள்தான் பெற்றிடணும்
அதற்காக வழிகள் பல
அமைத்துக் கொடுத்து வந்தார்.

அடம்பன் கொடியும்
திரண்டால் மிடுக்கென்று
தொழிலாள வர்க்கத்தை
ஒன்ருய் இணைத்து வந்தர்.

இனக் கலவரத்தைத்
தூண்டிவிட்டுச் சிலதலைவர்
ஒதுங்கியிருந்த போது
ஓங்கிக் குரல் கொடுத்தார்.

அகதிகளாக்கப் பட்ட
அப்பாவி ஈழவரை
புனர்வாழ்வுத் திட்டத்தால்
குடியமர்த்திப் பணி செய்தார்.

வர்க்க நலம் பேணுதற்காய்
நாளும் உழைத்த அவர்
ஒற்றுமையாய் இனம் வாழ்தல்
நலமென்று செப்பி நின்ருர்.

இனம் வாழ வேணு மென்று
இறுதி நாளில் உழைத்தவரோ
எம்மையும் தவிக்கவிட்டு
எங்கோ மறைந்து விட்டார்.



# ஏங்குகிறேன்!

பொழுது விடிந்தால் போதும்
புறப்பட்டு விடுவாய் நீ
பழகியோர் எமக்கெல்லாம்
பதை பதைப்பே மிஞ்சி நிற்கும்.

நீ சொல்லும் வார்த்தைகளைச்
செவி மடுக்கப் பலரிருக்க
சந்தர்ப்ப வாதிகளைச்
சந்திக்க ஓடுவதேன்?

அடிமை விலங் கொடித்து
அனைவரையும் மகிழ்விக்க
புறப்பட்ட ஒருசிலரோ
உனைத்தேடி அலைகின்ருர்.

உன்மனத்தை உறுத்துகின்ற
ஏக்கத்தைத் தணிக்கவென
எந்நாளும் மதுக் குடித்து
எம்மையும் ஏன் வாட்டுகிருய்?

ஈழத்தில் நம் குடும்பம்
செழிப்புடனே வாழுகின்ற
காட்சியினைக் கண்டிடவே
ஏங்குகிறேன்! ஏங்குகிறேன்!

www.tamilarangam.net



# என் ஈழத் திருநாடே!

என் ஈழத் திருநாடே
நீ வாழ்க இனிதாக!
தலைநிமிர்ந்து தரணியெல்லாம்
ஒளிபடைத்து வாழியவே!

தேவேந்திர முனையும்
தென்கிழக்குப் பெத்துவிலும்
மாந்தையுடன் பதுளையையும்
நீயணைத்து வாழியவே!

ஈழவர்கள் கடும் உழைப்பில்
நாளும்நீ செழித்திருப்பாய்
அவர்கள் மனக் குளிர்ச்சியினால்
நித்தம்நீ வாழியவே!

நல்ல மனம் உள்ளவர்கள்
நற்பண்பு கொண்டவர்கள்
நல்அரிய செயல் புரிந்து
உனைப் போற்ற வாழியவே!

வாழியவே! வாழியவே!
என் ஈழத் தாய் நாடே
ஈழவர்கள் ஆளுவதால்
வாழியவே! வாழியவே!